தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் ஒற்றுமை ஓட்டம்**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்ட மாணவியர் 300 பேர் தேசிய ஒற்றுமை தின விழிப்புணர்வு ஓட்டத்தில் பங்கேற்றனர் இந்திய அரசாங்கம் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 31ம் தேதியை தேசிய ஒற்றுமை தினமாக அனுசரிக்க பட்டது. முதலில் முனைவர். எஸ்.மோகன், முதன்மையர் (முதுகலை பட்டப்படிப்பு) அவர்கள் ஒற்றுமை தின உறுதிமொழியை வாசித்தார். முனைவர் ச.மகிமைராஜா, முதன்மையர் (வேளாண்மை) மற்றும் முனைவர் சி.சின்னதுரை, இயக்குனர் வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம் ஆகியோர் ஒற்றுமை ஓட்டத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தனர். ஓட்டம் வேளாண் பல்கலை வளாக ஆராய்ச்சிக் கட்டிடத்திலிருந்து ராபர்ட்சன் வீதி, தடாகம் சாலை, லாலி சாலை, மருதமலை சாலை வழியாக பல்கலை வளாகத்தை அடைந்தது. நாட்டு நலப் பணித்திட்ட ஒருங்கினைப்பாளர் முனைவர் க. குமுதா மற்றும் பாதுபாப்பு அலுவலர் திரு. அ. மணிகன்டன் ஆகியோர் பங்கேற்றனர்.

பல மாநிலங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்த மக்கள் ஒற்றுமையாய் வாழ வேண்டியதன் அவசியம் குறித்த பதாதைகளை ஏந்திச் சென்றனர். இந்தியா 65 சதவிகித இளைஞர்களைக் கொண்ட நாடு. மற்ற நாடுகளுக்கு இல்லாத ஒரு வரப்பிரசாதம். ஏனவே இளைஞர்களுக்கு நாட்டின் ஒற்றுமை, பாதுபாப்பு மற்றும் இறையாண்மைக்கு பங்கம் விளைவிக்கும் தீய சக்திகளை எதிர்கொண்டு ஒடுக்க வேண்டிய மிகப்பெரும் சவால் உள்ளது. அதனை வலியுறுத்தும் விதமாக ஒற்றுமை ஓட்டம் நிகழ்த்தப்பட்டது. இளைஞர்கள் வருங்காலத் தூண்கள் அவர்கள் தான் இந்தியாவை வல்லரசாக்க முடியும்.

சர்தார் வல்லபாய் பட்டேல் கொள்கைகள் அடங்கிய அச்சடித்த துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு அளித்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டை நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்கள் லதா, ஹேமா மற்றும் பாவேந்தன் மேற்கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்